# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.97/2025 | Date | : 03.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : கருப்பண்ணன் | Calling | : |
| Father Name | : தொங்கேரிநாயக்கர் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.11.2025.

(எதிரி ஆஜர்.எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். )

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

நான் எடப்பாடி வட்டம், கொங்கணாபுரம் ராக்கியாப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 14.03.2025 ம் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் என்னுடைய மகன் பழனிசாமி சங்ககிரியிலுள்ள லாரி பட்டரைக்கு செல்வதாக சொல்லிவிட்டு சென்றார். அப்போது இரவு 11.30 மணியளவில் என்னுடைய மகன் அக்கமாபேட்டை அருகே மண் ரோட்டில் நடந்துவந்துகொண்டிருந்தபோது பின்னால் வந்த லாரி ஒன்று மோதிவிட்டதாக என்னுடைய பக்கத்து வீட்டை சேர்ந்த கருப்பண் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். நாங்கள் உடனே சம்பவ இடம் வந்து பார்த்தோம். என்னுடைய மகனை சங்ககிரி, அரசுமருத்துவமனைக்கு கொண்டுசென்றுவிட்டதாக கூறினார்கள். மேலும் அங்கு சென்றுபார்த்தபோது என் மகன் வரும்வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். என்னுடைய மகனுக்கு தலை நசுங்கி இருந்தது. பின்னர் இது சம்ந்தமாக சங்ககிரி காவல்நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்தேன். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**). இது சம்ந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நேரடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்த தகவல் எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான்.

Sd/-S.Sathiya,

Sd/-Karuppannan

Judicial Magistrate No.1,

Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.97/2025 | Date | : 03.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : ஜெகதீசன் | Calling | : |
| Father Name | : முருகேசன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.11.2025.

<u>(எதிரி ஆஜர்.எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். )</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

நான் சங்ககிரி வட்டம், வீராச்சிபாளையத்தில் குடியிருந்து வெள்ளிவிழா கட்டிடம் அருகே லாரி ஒர்க்சாப் வைத்து தொழில்செய்துவருகிறேன். கடந்த 14.03.2025 ம் தேதி மதியம் 11.30 மணியிலிருந்து 12.00 மணியளவில் நான் என்னுடைய கடையிலிருந்து வெளியில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது பவானி ரோட்டிலிருந்து பழனிசாமி என்பவர் சாலையின் இடதுபுறமாக நடந்துவந்துகொண்டிருந்தார். அப்போது 3883 என்ற பதிவெண்கொண்ட லாரி ஒன்று பின்னால் வந்த லாரியின் இடதுபுறம் பழனிசாமி மீது மோதியதில் அவர்கீழேவிழுந்துவிட்டார். லாரியின் பின் சக்கரம் பழனிசாமியின் நெஞ்சு மற்றும் தலை பகுதியில் ஏறியது. பின்னால் ஆம்புலன்ஸ்மூலம் அவரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். ஆஜர் எதிரி அந்தகூட்டத்தில் இருந்தார். ஆனால் யார் அந்த லாரியை ஓட்டிகொண்டு வந்தார் என்று நான் சரியாக கவனிக்கவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,

Sd/-Jegadheesan

Judicial Magistrate No.1,

Sankari.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.97/2025 | Date | : 03.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : ஸ்ரீதர் | Calling | : |
| Father Name | : ஆறுமுகம் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.11.2025.

(எதிரி ஆஜர்.எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். )

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

நான் சங்ககிரி வட்டம், வடுகப்பட்டி, பாப்பாநாயக்கன்பட்டியில் குடியிருந்து வீல் அலைன்மென்ட் வேலை செய்துவருகிறேன். சங்ககிரி டு சேலம் சாலையில் வெள்ளிவிழா கட்டிடம் எதிரே எங்கள் ட்ரக் சோன் நிறுவனம் உள்ளது. கடந்த 14.03.2025 ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் நானும், எங்கள் உரிமையாளர் ஜெகதீசனும் முன்னால் நின்றுகொண்டிருந்தோம். அப்போது சேலம் ரோட்டில் இடதுபுறமாக ஒருவர் நடந்துசென்றுகொண்டிருந்தார். அப்போது பின்னால் வந்த லாரி ஒன்று கவனக்குறைவாக வந்து அவர் மீது மோதியதில் அவர் கீழே விழுந்துவிட்டார். லாரியின் பின் சக்கரம் நடந்து வந்த நபரின் தலை மற்றும்உடம்பில் ஏறியது. ஆம்புலன்ஸ்மூலம் அவரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். லாரியின் ஓட்டுனரை நான் சரியாக கவனிக்கவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

ஆஜர் எதிரி தான் லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது லாரி ஓட்டுனரை கவனிக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Sridhar

Judicial Magistrate No.1,

Sankari.